# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# ஒரு இளவரசன் மேய்ப்பனாகிறான்


**எழுதியவர்**: Edward Hughes

**சித்தரிப்பவர்**: M. Maillot; Lazarus

**மொழிபெயர்ப்பாளர்**: Rev. Dr. Dasan Jeyaraj

**தழுவியவர்**: E. Frischbutter; Sarah S.



**கதைகள்** 60 **ல்** 10

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil






சுற்றுமுற்றும் பார்த்தபோது தன்னை ஒருவரும் பார்க்கவில்லை என்று அறிந்துகொண்டு, அந்த அடிமையின் எஜமானனை மோசே தாக்கினான், நடைபெற்ற சண்டையிலே, மோசே எகிப்தியனை கொன்றுபோட்டான், துரிதமாக அந்த சரீரத்தை புதைத்துவிட்டான்.




மறு நாள் இரண்டு எபிரேயர்கள் சண்டையிடுவதைப் பார்த்தான். அதை நிறுத்த முயற்சித்தான். ஒருவன் சொன்னான், "அந்த எகிப்தியனை கொன்றதுபோல் என்னையும் கொன்றுவிடுவாயோ?"




அதைக்கேட்டு மோசே பயந்தான். நேற்று என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தது. பார்வோனுக்கும் தெரிந்தது. மோசே தப்பிக்கவேண்டியதாயிற்று. மீதியான் என்ற தேசத்திற்கு அவன் சென்றான்.




அவன் ஒரு கிணற்றின் அருகே இளைப்பாறியபோது, மீதியான் தேசத்து ஆசாரியனுடைய ஏழு குமாரத்திகள் தங்களுடைய ஆடுகளுக்கு தண்ணீர் காட்ட நீண்டதொட்டியை நிரப்பினார்கள்.




மற்ற மேய்ப்பர்கள் அவர்களை துரத்திவிட முயற்சித்தார்கள். மோசே பாதுகாத்து, அந்த பெண்களுக்கு உதவி செய்தான்.







அந்தப் பெண்கள் நடந்ததைச் சொன்னபோது, அவன், "அந்த மனிதனை அழைத்துக்கொண்டுவாருங்கள்", என்று சொன்னான்.
9


யெத்ரோ என்ற மறு பெயர்கொண்ட ரெகுவேலினிடத்தில் மோசே வாழ்ந்து வந்தான். பின்பு, ரெகுவேலின் மூத்தகுமாரத்தியை மோசே விவாகம் பண்ணினான்.
10


எகிப்திலோ, பார்வோன் மரித்துபோனான். எபிரேயராகிய, தேவனுடைய ஜனங்கள் இன்னும் அடிமைகளாகவே இருந்தார்கள்.
தங்களுடைய உபத்திரங்களிலே எவ்வளவாய் கூக்கிரலிட்டார்கள்!
11


எவ்வளவாய் தேவனிடத்தில் உதவி கேட்டு விண்ணப்பம் செய்தார்கள்! தேவன் அவர்கள் விண்ணப்பத்தைக்கேட்டார்.
12


மோசே அறிந்திருக்கவில்லை, ஆனால் அடிமைதனத்திலிருந்த எபிரேயரை மீட்பதற்கு மோசேயை உபயோகப்படுத்த தேவன் திட்டமிட்டிருந்தார். மோசே எகிப்தை விட்டு வந்து நாற்பது வருடங்களாயிற்று.
13


ரெகுவேலுடைய மந்தைக்கு அவன் மேய்ப்பனாயிருந்தான். ஆனால் எகிப்திலிருக்கும் தன்னுடைய சொந்த ஜனங்கள் இல்லாதக் குறையை உணர்ந்தான்.
14


ஒரு நாள் முட்செடி பற்றி எரிவதை மோசே பார்த்தான். ஆனால் எரிந்த தீயினால் முட்செடி வெந்துபோகாமலிருந்தது. அது எப்படி என்று மோசே கண்டுபிடிக்க முயற்சித்தான்.
15


மோசே அதை நெருங்கிய போது, தேவன் முட்செடியிலிருந்து அவனைக்கூப்பிட்டார். "மோசே!" "இங்கே இருக்கிறேன்," என்றான் மோசே, "நீ கிட்டேவராதே," என்று தேவன் சொன்னார். "உன் பாதரட்சையை கழற்றிப்போடு, ஏனெனில் நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி."
16


"நான் உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்பி என் ஜனங்களை எகிப்திலிருந்து கொண்டு வருவேன்," என்றார் தேவன். ஆனால் மோசே அங்கே போவதற்கு பயப்பட்டான்.
17


பின்பு தேவன் மோசேக்கு தன்னுடைய வல்லமையைக் காண்பித்தார். அவர் மோசேயுடைய கோலை சர்ப்பமாக மாற்றினார்.
18


மோசே அந்த சர்ப்பத்தின் வாலைப் பிடித்தபோது மீண்டும் அது கோலாக மாறியது. தேவன் இன்னுமொரு அடியாளத்தைக் கொடுத்தார்.
19


"உன்னுடைய கையை உன் மடியில் போடு," என்று கட்டளையிட்டார். மோசே அதேப்போல செய்தான். அவனுடைய கை வெண் குஷ்டம் பிடித்ததாய் காணப்பட்டது.
20

அவன் மறுபடியும் செய்தபோது, அவனுடைய கை குணமாயிற்று.



21

மோசே இன்னும் சாக்குபோக்கு சொன்னான். "எனக்கு நன்றாக பேசத்தெரியாது," என்று தேவனிடம் சொன்னான். தேவனுக்கு கோபம் வந்தது. "உன் சகோதரனாகிய ஆரோனை நான் உபயோகப்படுத்துகிறேன், பேச வேண்டிய வார்த்தைகளை அவனுடைய வாயில் போடு," என்று தேவன் சொன்னார்.



22

மோசே எத்திரோவிடம் போய், தன்னுடைய சாமான்களைக் கட்டிக்கொண்டு எகிப்திற்குச் சென்றான்.



23

ஆரோன் மோசேயை மலைப்பகுதியிலே சந்திக்க போகும்படி தேவன் வழி நடத்தினார். எபிரேய ஜனங்களை எகிப்திலிருந்து எப்படி விடுதலை செய்யவேண்டுமென்று தேவன் கொடுத்த திட்டத்தை மோசே ஆரோனிடம் கூறினான்.



24

இரண்டு பேருமாக சேர்ந்து, அந்தச் செய்தியை எபிரேய தலைவர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். அவன் அவர்களுக்கு அடையாளங்களை காண்பித்தபோது, தேவன் தங்களுக்கு உதவி செய்வார் என்று அறிந்து கொண்டார்கள்.



25

எல்லோரும் சேர்ந்து, பணிந்து ஆராதனை செய்தார்கள்.



26













ஒரு இளவரசன் மேய்ப்பனாகிறான்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யாத்திராகமம் 2-5

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.